# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு2031 கார்த்திகை 7 புதன்கிழமை(22-11-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:293


## ஆனைக்கோட்டைச் சந்தியில் நேற்றுக் காலை கிரனேட் வீச்சு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்!

### பத்து வயதுச் சிறுவன் பலி; சிப்பாய் உட்பட நால்வர் காயம்

யாழ்ப்பாணம்,நவ.22

ஆனைக்கோட்டைச் சந்தியில் நேற்றுக் காலை 9.45 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் பத்து வயதுச் சிறுவன் ஒருவர் பலியானார்; இராணுவ சிப்பாய் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

ஆனைக்கோட்டைச் சந்தியில் நின்ற படையினர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் கிரனேட்டை வீசிவிட்டு தப்பியோடினார்கள் என்றும் -

இதனைத் தொடர்ந்தே படையினர் அப்பகுதியில் சரமாரியான துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் இடையில் சிக்கி கழுத்தில் காயத்துக்குள்ளான பத்து வயதுச் சிறுவனான செபஸ்தி

(10ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் உறவினர் நேற்று நகரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.மாவட்டத்தில் மேல்நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் எனக் கோரி நேற்று யாழ்.நகரில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள சிறைச்சாலை முன்பாக நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆரம்பித்த இந்த ஊர்வலத்தில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் பெற்றோர்கள், மனைவிமார்கள், சகோதரிகள் கலந்துகொண்டனர்.

இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட இளம்பெண்கள் கைக்குழந்தைகளுடன் காணப்பட்டனர்.

பிரதான வீதியூடாக யாழ்.நீதிமன்றத்தினை அடைந்த ஊர்வலத்தினர் அங்கு யாழ்.நீதிவானைச் சந்தித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட

(10ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கொழும்பு வரும் அமைச்சர் ஹெய்ன் தெரிவிப்பு

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பிரிட்டிஷ் அரசு முழு ஆதரவு!



### எனினும் நேரடியாக சமாதான முயற்சிகளில் ஈடுபடமாட்டாது

லண்டன்,நவம்பர்22

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பிரிட்டிஷ் அரசு முழு ஆதரவு வழங்கும். ஆனால் சமாதான முயற்சிகளில் அது நேரடியாக ஈடுபடமாட்டாது.**

**இன்று கொழும்பு வரும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ன் நேற்று பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இலங்கையில் இன்றும் நாளையும் விஜயம் மேற்கொண்டிருக்கும் பீற்றர் ஹெய்ன் தமது விஜயம் குறித்து பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் சமாதான முயற்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியில் மிதிவெடிச் சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.22

ஆட்டுக்கு குழை வெட்டப் பற்றைக்காணி ஒன்றினுள் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்கு மேல் இழந்தார்.

அச்சுவேலி தம்பாலையில் நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கணபதி தம்பாப்பிள்ளை (வயது - 73) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## விமானப் பயணிகளுக்கு 2ஆம் நாளாக ஏமாற்றம்

யாழ்ப்பாணம்,நவ.22

பலாலி - இரத்மலானை விமான சேவையில் பயணம் செய்வதற்காக பலாலி வரை அழைத்துச் செல்லப்பட்ட 48 பயணிகள் இரண்டாவது நாளாகவும் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் 48 பயணிகள் பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

காலநிலை சீரில்லாததால் விமானச் சேவை ரத்து செய்யப்பட்டு அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிவரப்பட்டனர்.

மீண்டும் அதே பயணிகள் நேற்றுக் காலை பலாலிக்கு அனுப்பப்பட்டனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக விமான சேவை ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டு மீண்டும் அவர்கள் இங்கு திருப்பி

(10ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் அரச களஞ்சிய பொறுப்பாளருக்குப் பிணை!

### வவுனியா நீதிமன்றம் உத்தரவு

வவுனியா,நவ.22

யாழ்ப்பாணம் குருநகர் அரச களஞ்சியத்தின் பொறுப்பாளர் ஆர்.கதிர்காமநாதன் சில நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள களஞ்சியப் பொறுப்பாளர் ஆர்.கதிர்காமநாதனை விடுதலை செய்யுமாறு கோரி அவரது மனைவியான சறோஜினி தேவி கதிர்காமநாதன் வவுனியாவில் இயங்கும் வடமாகாண மேல்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை மேல் நீதிமன்ற நீதிவான் என்.யோகசிகாமணி முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தமது வாதத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிகுளம் ரெலோ முகாம் படையினரால் சுற்றிவளைப்பு!

### 13 பேர் கைது; ஆயுதங்கள் பறிமுதல்!

வவுனியா,நவ.22

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் அமைந்துள்ள ரெலோ அமைப்பின் முகாம் ஒன்று நேற்றுக் காலை 6 மணியளவில் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

இந்தத் தேடுதலின்போது மேற்படி முகாமில் இருந்த 13 பேர் இராணுவத்தினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும் -

தமது கட்சி உறுப்பினர்களின் பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட ரி-56 ரக துப்பாக்கிகள் மற்றும் அதற்கான ரவைகள், கைக்குண்டுகள் என்பனவற்றை இராணுவத்தினர் பறிமுதல் செய்துவிட்டனர் எனவும் - ரெலோ அமைப்பு அறிவித்துள்ளது.

இராணுவத்தினரால் விசாரணைக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரியில் மேல்நீதிமன்ற அமர்வுகள்!

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்ப்பாணத்தில் ஜனவரி மாதம் மேல்நீதிமன்ற அமர்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

நீதிமன்றச் செயற்பாடுகள் தொடர்பான ஆரம்பப்பணிகளை மேற்கொள்வதற்காக, யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள கே.பி.எஸ்.வரதராஜா அடுத்த மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

இரு தினங்கள் இங்கு தங்கியிருந்து ஆரம்பப் பணிகளை மேற்கொண்டு கொழும்பு திரும்பி அமர்வுகளை ஜனவரியில் ஆரம்பிக்கப் போவதாக நேற்று அவர் அறிவித்துள்ளதாக யாழ்.சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்தார்.(இ-3)

## யாழ்.கஸ்தூரியார் வீதிச் சம்பவம்: சடலங்கள் உறவினரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் பலியானவர்களின் சடலங்கள் உரியவர்களிடம் யாழ்.நீதிவானின் உத்தரவுப்படி நேற்று ஒப்படைக்கப்பட்டன.

இச் சம்பவத்தில் பலியானவர்களில் ஒருவரான யாழ்.பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த திலகசிறி விஜேவீர (வயது 40) என்பவரின் சடலம் யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு மாதங்களுக்கு மட்டுமே பாதுகாப்பு அனுமதி செல்லுபடி

### சிவில் நிர்வாக அலுவலகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.22

வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயணத்துக்கான பாதுகாப்பு அனுமதி இனிமேல் இரு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரிகேட் அலுவலகங்களில் பொது மக்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அந்த அலுவலகத்தால் அனுமதி வழங்கப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நால்வர் கைது என முறையீடு

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்ப்பாணம், மானிப்பாய், சங்கானை, கொடிகாமம் பகுதிகளில் வைத்து படையினரால் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்மநாதன் கருணாநிதி (வயது

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(21-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 826,919**

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# புலிகளுடனான தொடர்பை பேணும் பிரிட்டிஷ் அமைச்சர்

லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் தொடர்புகளைத் தொடர்ந்து தாம் வைத்துள்ளதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ன் தெரிவித்துள்ளார்.

இன்று இலங்கை வரவிருக்கும் அவர் தற்சமயம் புதுடில்லியில் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகின்றார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'த ஐலண்ட்' பத்திரிகைக்கு அவர் வழங்கியுள்ள பேட்டி ஒன்றில் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைவரம் தொடர்பாக லண்டனில் உள்ள புலிகளின் பிரதிநிதிகளுடன் விவாதித்து வருவதாகவும்-

இலங்கை விவகாரத்தில் ஈடுபட்டுள்ள நோர்வே விசேட தூதர் எரிக் சொல் ஹெய்முடன் அடிக்கடி தாம் தொடர்பு கொண்டு இந்த விடயம் குறித்து விரிவாக ஆராய்ந்து வருவதாகவும்- அவர் மேலும் தெரிவித்தார். (உ-3-8)

## கழிவு வாய்க்கால் துப்புரவு

யாழ்.மத்திய பஸ்தரிப்பு நிலையம் மற்றும் கஸ்தூரியார் வீதிப் பகுதியில் நீண்டகாலமாகத் தூர்ந்து கிடந்த கழிவு வாய்க்கால்கள் அண்மையில் பெய்த அடை மழையைத் தொடர்ந்து யாழ்.மாநகரசபை சிற்றூழியர்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (ம-6)

---

# கண்ணீர் காணிக்கைகள்

எமது பீடத்தின் முகாமைக் கற்கைகள் துறையில்
முதலாம் வருட மாணவி
**M.யசோதாவின்**
பாசமிகு கணவர்
**A.முரளிதரன்**

அவர்களின் அகால மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

முகாமைத்துவ கற்கைகள்
வணிகபீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(80768)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -இலங்கை

**தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கை நெறி.**

**தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி**

**முதலாம் / இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை**

**2000/2001**

மேற்படி பரீட்சைகள் 2000. 11. 25, 28 - 2000.12.02, 06, 09 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. பரீட்சைக்குத் தகுதியுடைய மாணவர்கள் யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி அலகில் 2000.11.24ஆம் திகதிக்கு முன்பதாக நேரில் வந்து தமது பரீட்சை அனுமதி அட்டையினைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

பதிவாளர்.
21.11.2000 (C/13930)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
## செல்லையா நடேசபிள்ளை
(ஓய்வு பெற்ற பிராந்திய முகாமையாளர், சிங்கர் கம்பனி)

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 17-03-1918 | 24-10-2000 |

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் தலைவனாய்
எங்கள் உயர்வுக்காய் வாழ வழிகாட்டிய அன்புருவே!
என்றும் எங்கள் மனதில் வீற்றிருப்பீர் பல்லாண்டு.

இன்று புதன்கிழமை கன்னியா வெந்நீர் ஊற்றில் நிகழும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், திருகோணமலை இல.60, அருணகிரி வீதியில் உள்ள எமது இல்லத்தில் நாளை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவால் நாம் துயருற்றிருந்த வேளை நேரில் வந்தும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியும், கடிதம், பக்ஸ், தொலைபேசி, ஈமெயில் ஆகியவை மூலமும் அஞ்சலி செலுத்தி இரங்கலைத் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவனின் பிரிவால் வாடும்
- குடும்பத்தினர்.

*ந.வித்தியாதரன் (மகன்),*
*12, சிவகுருநாதர் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

(C/13926)

---

வலி.மேற்கு இந்து ஆலயங்களின் மகா சபை

# நன்றி நவிலல்

சமய கலாசாரத்தைப் பேணவும், சமய தொண்டுகளை மேற்கொள்ளவும் வலி.மேற்குப் பிரதேச இந்து ஆலயங்களில் பிணக்குகள் ஏற்படும்போது அதனைப் புரிந்துணர்வின் அடிப்படையில் தீர்த்து வைக்கவும், வழியமைத்து இம்மகா சபையை உருவாக்க ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும்,

அமைச்சர் கௌரவ **கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
(வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ் அலுவல்கள் இந்து கலாசார அமைச்சர்)
அவர்களுக்கும், யாழ்.மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான

**திரு.வே.குகேந்திரன் (ஜெகன்)** அவர்களுக்கும்
*திரு.த.திரிலோகநாதன் ஊடாக*
*தலைவர்,*
*வலிகாமம் மேற்கு பிரதேச சபை,*
*சுழிபுரம்.*

எமது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*தலைவர், செயலாளர்,*
*நிர்வாக சபை உறுப்பினர்கள்.*

*சுழிபுரம்.*
*வலி.மேற்கு இந்து ஆலயங்களின் மகா சபை.*

(C/13933)

---


**லஷ்மி** இணுவில்
அர்ஜுன்,ரம்பா,
நடித்த
இரண்டாவது வாரமாக
**சுதந்திரம்**
காட்சிகள் - 10.30, 2.30 (ப.நே.)
(80769)

**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜுன்,ரோஜா,
ரம்பா,ஆனந்தராஜ்
நடித்த
**அடிமைச்சங்கிலி**
(நீம்ஸ்)காட்சிகள் - 11.00, 2.30(பி.நே.
(80727)

**ராஜா** யாழ்ப்பாணம்
விஜய், சிம்ரன்,
மணிவண்ணன்
மற்றும் பலரின் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
**துள்ளாத மனமும் துள்ளும்**
காட்சிகள்:10.30, 2.00 (பி.நே.)
(C/13618)

---

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
| --- | --- | --- |
| 04 - 02 - 1943 |  | 09 - 10 - 2000 |

அமரர்
## ஐயாத்துரை துரைராஜா
(முன்னாள் அதிபர், யா/வண்.நாவலர் மகா வித்தியாலயம்)

அன்புடன் அரவணைத்தீர்!
மேன்மையுற, நாம் வாழ
மேன்மேலும் சீர் செய்தீர்!
பாரினில் நாம் சிறக்க
பாங்குடன்நீர் உழைத்தீர்!
நீக்கமற எம் நெஞ்சில்
நீடூழி நீர் வாழ்வீர்.

இன்று (22-11-2000) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.

*496, கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(80748)

---

# மாணவர் பொதுக்கூட்டம்

இன்று (22. 11. 2000) புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கான முக்கிய பொதுக்கூட்டம் காலை 9. 00 மணிக்கு யாழ். கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

பல்கலைக்கழக (U.S.U.)
மாணவர் ஒன்றியம்.

(80731)

---

# சிவாசார்ய அபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் விக்கிரம வருஷம் கார்த்திகை மாதம் 8ஆம் திகதி நாளை (23.11.2000) வியாழக்கிழமை காலை 10 மணி 04 நிமிஷம் தொடக்கம் 11. மணி 49 நிமிஷம் வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

ஆவரங்கால் சிவன் தேவஸ்தான பிரதமகுரு
**பிரம்மஸ்ரீ வே.நடராஜக் குருக்கள் அவர்களின்**
ஏகபுத்திரன்
**பிரம்மஸ்ரீ யோகானந்தேஸ்வர சர்மா**
அவர்களுக்கு

ஆவரங்கால் பர்வதவர்த்தினி சமேத ராமலிங்கேஸ்வரர் திருவருளை முன்னிட்டு மேற்படி தேவஸ்தானத்தில் சிவாசார்ய அபிஷேகம் நிகழ்த்துவதற்குப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராகக் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

தீக்ஷா குரு:
சாஹித்ய சிரோமணி
**பிரம்மஸ்ரீ ப.முத்துக்குமாரசாமிக் குருக்கள்**

*சிவன் கோயில்,*
*ஆவரங்கால், புத்தூர்.*

*வே.நடராஜக் குருக்கள்,*
*ந.விஜயலக்ஷ்மி அம்மா.*

(80754)

# புலிகள் ஊடுருவித் தாக்குவதைத் தடுக்க திருமலைத் துறைமுகத்தில் விசேட ஏற்பாடு

## முப்படைகளும் இணைந்து நடவடிக்கை

கொழும்பு,நவ.22

திருகோணமலைத் துறைமுகப் பிரதேசத்துக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்துவதைத் தடுப்பதற்காக முப்படைகளும் கொண்ட விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் அங்கு செய்யப்பட்டுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்தின தெரிவித்தார்.

திருகோணமலைத் துறைமுகம் மற்றும் அதை அண்டிய பிரதேசங்கள் திருமலை நகரப் பகுதிகள் உள்ளடங்கிய வலயத்துக்குள் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் -

விடுதலைப்புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்த முடியாதவாறு இந்த ஏற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தக் கூடியவர் ஜனாதிபதி

## பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு,நவ.22

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்டக்கூடிய மாபெரும் சக்தி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மட்டுமே உள்ளது. பிரபாகரன் நிச்சயம் தோல்வியைத் தழுவிக் கொள்வார்.

மேற்கண்டவாறு தங்காலை நகரில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் சமூக சேவைகள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசும்போது கூறியதாவது, எந்த ஒரு அரசாங்கம் மக்களுக்கு தூய எண்ணத்தோடு சேவை செய்கிறதோ? அந்த அரசை எவராலும் அசைத்து விட முடியாது. பொ.ஐ.மு அவ்வாறு சேவை செய்ததாலேயே அனைத்துத் தேர்தல் தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. கடவுளின் ஆசீர்வாதம் அங்கு நிறைய இருக்கின்றது.

1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.க தேர்தலில் கள்ள வாக்குகளைப் போட்டுப் பதவிக்கு வந்து இந்த நாட்டைக் குட்டிச் சுவராக்கியதை மக்கள் மறந்து விடவில்லை என்றார். (இ-4)

# சாவகச்சேரி வர்த்தகர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை

சாவகச்சேரி நகர்ப் பகுதி வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் மேற்கொண்டு வருவதாக மன்றச் செயலாளர் வ.இராசதுரை தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களின் விவரங்கள் திரட்டப்படுவதால் கரவெட்டி அஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் உள்ள வணிகர் மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பாதிப்புக்களின் விவரங்களை உடனடியாகப் பதிவு செய்யுமாறு மன்ற அங்கத்தவர்களை அவர் கேட்டுள்ளார். (ம-117)

# நாய்களுக்குத் தடுப்பு ஊசி

நெல்லியடி,நவ.22

துன்னாலை பொது சுகாதார பரிசோதகர் பிரிவில், நாளை வியாழக்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு ஊசி போடப்பட உள்ளது.

யார்க்கருகாட்டுப்புலம், யார்க்கரை, வல்லிபுரக் குறிச்சி ஆகிய இடங்களில் வைத்து தடுப்பு ஊசி போடப்படும் என துன்னாலை பொது சுகாதார பரிசோதகர் க.இளங்கோ தெரிவித்துள்ளார். (ம-109)

# கட்டாக்காலி மாடுகளால் தொல்லை

நெல்லியடி,நவ.22

வடமராட்சிப் பகுதியில் உள்ள உடயகதிர்காமம், வல்லிபுரக் குறிச்சி பகுதிகளில் உள்ள வயல்கள் கட்டாக்காலி மாடுகளால் நாசமாக்கப்பட்டு வருகின்றன.

யுத்த சூழ்நிலையினால் மக்கள் வெளியேறியுள்ள தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து வடமராட்சிக்கு வந்து சேரும் கட்டாக்காலி மாடுகளே இவ்வாறு வயல்களை நாசம் செய்து வருகின்றன. (ம-109)

# நகரசபை அலுவலகம் புதிய இடத்தில்

சாவகச்சேரி,நவ.22

நெல்லியடி பிரதேச சபை நூலக கட்டடத்தில் இயங்கி வந்த சாவகச்சேரி நகரசபை அலுவலகம் கடந்த வாரம் முதல் நெல்லியடி பிரதான வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார். (ம-31)

# வீடுகள் அமைக்க 100 குடும்பங்களுக்கு நிதி உதவி

வலி.தென்மேற்கு,நவ.22

மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வீடமைக்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைப்பதற்கென 100 வறிய குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

மேற்படி திட்டத்திற்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 100 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் ஈ.பி.டி.பி அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அனுமதியுடன் தெரிவு செய்யப்பட்ட இந்தக் குடும்பங்களுக்கு விரைவில் நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை உடுவில் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 100 குடும்பங்களுக்கும் வீடுகளை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-185)

# வவுனியாவில் தமிழ் வர்த்தகர் கடத்தல்

கொழும்பு,நவ.22

வவுனியாவில் கடந்த வெள்ளியன்று வெள்ளைவானில் வந்த சிலரால் தமிழ் வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் என்று வன்னி மாவட்ட ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் பி.சாந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வவுனியா பிரதிப் பொலீஸ் மா அதிபரிடம் கோரியுள்ளதாகவும் -

வவுனியா நகரப் பகுதியில் மேலும் ஐவர் காணாமல் போயுள்ளதாகத் தனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது: அவர்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் -

அவர் மேலும் சொன்னார். (ம-4)


# ஐந்தாவது பிறந்தநாள் வாழ்த்து

(22.11.1995 - 22.11.2000)



## செல்வி க.சௌமியா

அளவெட்டியைச் சேர்ந்த
திரு.சி.கருணாகரன் (கருணா)
பண்ணாகத்தைச் சேர்ந்த
திருமதி க.கலையரசி (கலா)
தம்பதியரின் செல்வப் புதல்வி **செல்வி சௌமியா**
தனது ஐந்தாவது பிறந்த தினத்தை இன்று (22-11-2000)
புதன்கிழமை அமெரிக்காவிலுள்ள தனது இல்லத்தில் அன்பு,
அப்பா, அம்மா, தம்பி–நவீன், ஆசைக்குட்டி மாமாவுடன்
மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை கனடாவில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, யாழ்ப்பாணம் பண்ணாகத்தில் இருக்கும் அன்பு அம்மம்மா, சுவிஸில் இருக்கும் பெரியமாமா, சின்னமாமா, லண்டனில் இருக்கும் பெரிய சித்தி, சித்தப்பா, தம்பி-சாருக்குட்டி, உதயன்மாமா, கொழும்பில் இருக்கும் சின்னச்சித்தி, அளவெட்டியில் இருக்கும் பெரியமாமி, மாமா, மச்சான், மச்சாள், கனடாவில் இருக்கும் இளையமாமி, மாமா, மச்சான்மார், ஜேர்மனியில் இருக்கும் ஞானம்மாமி, மாமா, மச்சான் மற்றும் அமெரிக்காவில் இருக்கும் ரஞ்சுமாமா, ஜெனிபேட் மாமா, இந்தியாவில் இருக்கும் கிருஷ்ணா அங்கிள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பண்ணாகம் விசவத்தனை முருகன் அருளுடன் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் அருளும் பெற்று சகல சௌபாக்கியங்களும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் ஆய கலைகள் அறுபத்து நான்கும் கிடைக்கப்பெற்றுப் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

பண்ணாகம்,
சுளிபுரம்.

**திருமதி ஆ.நடராசா**
(அம்மம்மா)

(C/3885)


# முல்லை.மாவட்ட பாடசாலைகளுக்கு போதியளவு தளபாட வசதி இல்லை

யாழ்ப்பாணம்,நவ.22

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு தேவையான தளபாட உபகரணங்கள் இன்றி பாடசாலை நிர்வாகமும் மாணவர்களும் சிரமப்படுவதாக முல்லை மாவட்ட கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வலயத்தில் உள்ள 8 ஆயிரத்து 251 கனிஷ்ட பிரிவு மாணவர்களுக்கு கதிரைகளோ மேசைகளோ இல்லையெனவும் இதனால் இந்த மாணவர்கள் நிலத்தில் இருந்தே தமது கல்வியைத் தொடர்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்படி பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு 675 கரும்பலகைகள் தேவையாக உள்ள போதும் தற்போது- 348 கரும்பலகைகளே இருக்கின்றன.

கற்பித்தல் செயற்பாட்டிற்கு அவசியமான கரும்பலகைகளைக் கூட போதியளவு அனுப்பாது இந்தப் பிரதேச பாடசாலைகளை அரசு புறக்கணித்து வருவதாகவும்,

ஏனைய மாவட்ட பாடசாலைகளுக்கு கணனிகளும் குளிரூட்டல் வசதிகளும் அரசாங்கத்தால் செய்து கொடுக்கப்பட்டு வருவதுடன் தேவைக்கு அதிகமாக தளபாடங்களும் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ம-6)

# மட்டுவில் சண்டைக்கு சொர்ணமே தலைமை

## அரச வானொலி வெளியிடும் தகவல்

கொழும்பு,நவ.22

சாவகச்சேரி மட்டுவில் தெற்குப் பகுதியில் தற்போது மோதல்களில் ஈடுபட்டு வரும் விடுதலைப்புலிகளின் அணிகளுக்கு சொர்ணம் தலைமை வகித்துத் தாக்குதல்களை வழி நடத்துவதாக அரச வானொலி நேற்றுத் தெரிவித்தது.

மட்டுவில் பகுதியில் படையினரால் புதிதாகக் கைப்பற்றப்பட்ட 6 சதுரக்கிலோ மீற்றர் பிரதேசத்தில் தாக்குதல்கள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாகவும் -

இந்தத் தாக்குதல்களின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் இருபது பேர் கொல்லப்பட்டனர் என்றும் -

எழுபது பேர்வரை காயமடைந்தனர் என்றும் -

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத்கருணாரட்ன தெரிவித்தார்.

புதிதாகக் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் தமது நிலைகளைப் படையினர் பலப்படுத்தி வருவதாகவும் - அந்தப் பிரதேசத்தில் நேற்றுக் காலை தேடுதல் நடத்திய படையினர் விடுதலைப்புலிகளால் விட்டுச் செல்லப்பட்ட பல ஆயுத தளபாடங்களை மீட்டுள்ளதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார். (உ-3-8-10)

## இடம்பெயர்ந்து ஏனைய வலயங்களில் கற்கும்

# தென்மராட்சிப் பிரதேச மாணவருக்கு இலவச சீருடை வழங்கப்படவில்லை

தென்மராட்சி,நவ.22


தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது வலிகாமம், வடமராட்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இதுவரை இலவச சீருடைகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்வின் பின்னர் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தினால் திரட்டப்பட்ட விவரங்களின்படி 18 ஆயிரத்து 849 மாணவர்கள் வடமராட்சி,வலிகாமம் பகுதிகளில் கல்வி கற்கின்றனர். எனினும் மாகாண கல்வி அலுவலகத்தினால் 5ஆயிரத்து 200 மாணவர்களுக்கான சீருடைகளே வழங்கப்பட்டுள்ளன. இதனால் தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்படும் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே சீருடைகள் வழங்கப்பட்டன.

ஏனைய கல்வி வலயங்களில் பாடசாலைகளில் கல்வி பயிலும் தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத் துணிகள் வழங்கப்படவில்லை எனவும் -

இந்த மாணவர்களுக்கு அந்தந்த வலயங்களே சீருடைத் துணிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமெனக் கூறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் திணைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை "உதயன்" ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் "உதயன்" பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறிய வந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| 20.11.2000 (திங்கட்கிழமை) வரை கிடைத்த நிதி:- | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 805,582 |
| 1. ஆசிரியர்கள், ஊழியர்கள் - இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் | - 800 |
| 2. ஓர் அன்பர் - இராசவீதி, கோப்பாய் | - 200 |
| 3. கட்டடப் பொருள் கூட்டுத்தாபன ஊழியர்கள் - யாழ். | - 5,001 |
| 4. சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் சார்பாக மேலைப்புலோலி வாழ் அன்பர்கள். | - 5,450 |
| 5. ஒரு சகோதரி - கலைவாணி வீதி, வடலியடைப்பு | - 200 |
| 6. ஓர் அன்பர் - கோயில் வீதி, ஏழநல்லூர் | - 306 |
| மொத்தம்: | - 817,539 |

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/செங்குந்த இந்துக் கல்லூரி

உப அதிபர் **திரு.த. நாகராசா** அவர்கள்

அதிபர் தரம் I க்கு பதவியுயர்வு பெற்றமையையும் அவரது கல்விச் சேவை மேலும் தொடரவும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

(80767)

## கண்ணீர் காணிக்கை

எமது முதலாமாண்டு சகோதர மாணவியான

செல்வி அ. தர்ஷினி

அவர்களின் அன்புச் சகோதரனாகிய

### அருள்பிரதாசன் முரளிதரன்

அவர்கள் 20-11-2000 அன்று அகால மரணமடைந்துள்ளார். அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

விஞ்ஞானபீட முதலாம் வருட
மாணவர்கள் (2000/2001)

(80764)

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு நாகலிங்கம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னப்பு நாகலிங்கம் 20.11.2000 திங்கட்கிழமை திருமலையில் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னப்பு தம்பதிகளின் மகனும், பரமேஸ்வரியின் (மணி) அன்புக் கணவரும், வசந்தி (ஆஸ்திரேலியா), சுசிலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாளன் (ஆஸ்திரேலியா), விஜயேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் திவ்யாவின் அன்புப் பேரனுமாவார்.

இவரது இறுதிக் கிரியைகள் இன்று (22.11.2000) புதன்கிழமை திருமலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குமாரசாமி சண்முகநாதன்.
புன்னாலைக்கட்டுவன்.

T. P. 026/20062
திருமலை.

(80751)

### அருள்பிரதாசன் முரளிதரன்

(உரிமையாளர், கலைவாணி நகை மாடம்)

பருத்தித்துறையை சேர்ந்த அருள்பிரதாசன் முரளிதரன் நேற்று முன்தினம் (20 - 11 - 2000) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பெ. அருள்பிரதாசன் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)—ராதா தம்பதிகளின் அருமைப் புதல்வனும், யசோவின் (முகாமைத்துவம், யாழ். பல்கலைக்கழகம்) அன்புக் கணவரும், மேகலா, தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன் – மீனாம்பிகை, Dr. S யோகநாதன் (சிங்கப்பூர்), சிவாஞ்சலி ஆகியோரின் அன்பு மருமகனும் மீரா, கலைவாணி, பாலராஜ், ரூபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22- 11- 2000) புதன்கிழமை பகல் 10. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தனை வெட்டிய ஆலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஆ. பாலச்சந்திரன்
(மாமன்)

தும்பளை,
பருத்தித்துறை:

(80763)

### வைரமுத்து செல்லமுத்தர்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து செல்லமுத்தர் நேற்று (21-11-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், சதானந்தமூர்த்தி (ஹற்றன் நஷனல் வங்கி City Office Colombo), சதாசிவமூர்த்தி (I.W. யாழ். கச்சேரி), செல்வராணியின் பாசமிகு தகப்பனாரும், பராசக்தி, சுகந்தினி (யாழ். பொது நூலகம்), கிருஷ்ணகுமார் (அரச கட்டட ஒப்பந்தகாரர், வெங்கடேஸ்வரன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் புரந்தரி, நிராதன், சயந்தரி, அபிராமி மதுராங்கன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22-11-2000) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
பொ. கிருஸ்ணகுமார்.
[மருமகன்]

தற்காலிக முகவரி:
229, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
ஸ்ரீபவனம்,
நாவற்குழி, கைதடி.

(80771)

லொறிச் 'செஸி' கொள்வனவு விவகாரம்:

# மகேஸ்வரனின் குற்றச்சாட்டுக்கு சமாசத் தலைவர் சிவஞானம் பதில்

யாழ்ப்பாணம், நவ, 22

யாழ். குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் எட்டு லொறி அடிச்சட்டங்களுக்கு 'செஸி'களுக்கு மூன்று மடங்கு கட்டணம் அறவிடப்பட்டதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை மறுத்து யாழ். மாவட்ட விவசாய, நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிக்கை ஒன்றை, விடுத்துள்ளது.

சமாசத்தின் தலைவர் சி. வி. கே. சிவஞானம் விடுத்துள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். மாவட்ட விவசாய, நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட 8 லொறி அடிச்சட்டங்களுக்கும் மேலதிக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் ஈ எஸ்/ ஒபி /1 / 24 இலக்கம் கொண்ட 17-01-2000 ஆம் திகதி கடிதத்தில் கோரப்பட்டபடி ஓர் அடிச் சட்டத்துக்கு 2 லட்சத்து 40 ஆயிரத்து 557 ரூபா 85 சதம் வீதம் வங்கி ஆணை மூலம் அவருக்கு பணம் செலுத்தப்பட்டது. இந்தக் கொடுப்பனவு ஓர் அரச திணைக்களத்துக்கே மேற்கொள்ளப்பட்டது. தனியார் கம்பனிக்கு அல்லவென்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்தக்கட்டணம் கூடுதலாக விருப்பதை ஆராய்ந்த போது.பாரவூர்தி அடிச் சட்டத்துக்கு (செஸி) பதிலாக பாரவூர்தி (லொறி) எனத் தவறுதலாக கருதி கட்டணம் நிர்ணயிக்கப்பட்டமை தெரிய வந்தது.

எமக்கு மட்டுமன்றி நேரடியாக தாமே பாரவூர்தி அடிச் சட்டம் கொள்வனவு செய்த நல்லூர் ப. நோ. கூ. சங்கத்திடமும் இதே தொகை அறவிடப்பட்டமை அறியப்பட்டது. இதைச் சுட்டிக்காட்டி கடந்த ஜூலை 4ஆம் திகதி மேலதிக அத்தியாவசியசேவைகள் ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில், எமது அங்கத்துவ சங்கமாகிய நல்லூர் ப. நோ. கூ. சங்கமும், நாமும் மேலதிகமாக செலுத்திய ஒன்பது அடிச் சட்டங்களுக்கான கட்டணத்தை மீளளிக்கும்படி கோரப்பட்டது.

இந்தக் கோரிக்கை அவர்களால் அங்கீகரிக்கப்பட்டமையும் எமக்கு அறியத்தரப்பட்டுள்ளது. இந்தவிடயம்கடந்த 16. 11. 2000 ஆம் திகதி நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலும் எம்மால் தெளிவாக தெரிவிக்கப்பட்டது.

இதைத் தவிர, யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் சுயமாக இயங்க விடாமல் இச்சமாசம் கட்டுப்படுத்துவதாகவும், அதன் காரணம் பற்றியும் வினாவப்பட்டுள்ளது.

முதலில் இச்சமாசம் 1982 லிருந்து யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமாக இருந்துவந்தது என்பதையும் இம்மாவட்டத்திலுள்ள சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையமாக இதை மாற்றியமைக்கும் பொருட்டு 1992 இல் இது விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமாக மாற்றம் பெற்றது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

கூட்டுக்கொள்வனவு, பேரம் பேசுதல், மொத்தக்கொள்வனவுகளின் அனுகூலகங்கள் என்ற பல அம்சங்களைக் கருத்தில் கொண்டே இச்சமாசம் உருவாக்கப்பட்டது; அதற்கமையவே செயற்பட்டும் வருகிறது.

யாழ். குடாநாட்டின் 25 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் அங்கம் வகிக்கும் ஒரு தாய்ச் சங்கமாக அமைந்திருக்கும் இச்சமாசத்துக்கு யாரையும், எதற்கும் கட்டாயப்படுத்தும் அதிகாரமோ கட்டுப்படுத்தும் அதிகாரமோ, அறவே கிடையாது. எனவே, சங்கங்களின் சுய செயற்பாட்டை நாம் கட்டுப்படுத்துகின்றோம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆனால் எமது தேவைகளை எமது கூட்டுறவு அமைப்பின் மூலமே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இதய அஞ்சலிகள்

எமது சக மாணவி

M. யசோவின்

அன்புக் கணவர்

### அமரர் A. முரளிதரன்

அவர்கள் அகாலமரணம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

முதலாம் வருட
முகாமைத்துவ
மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(80766)

## கண்ணீர் அஞ்சலி

எமது பீட மாணவி

திருமதி மு. யசோ

அவர்களின் அன்புத்துணைவர்

### A. முரளிதரன்

அவர்கள் 20-11-2000 அன்று அகாலமரணமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

3 ஆம் வருட முகாமைக் கற்கைகள்,
வணிக பீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(80770)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னையா தங்கம்மா

ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னையா தங்கம்மா நேற்று முன்தினம் 20-11-2000 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. சின்னையா
(கணவர்)

சந்தை வீதி,
ஆவரங்கால்.

(80734)

### ஆறுமுகம் சுப்பையா

(முன்னாள் ஆசிரியர், சண்டிலிப்பாய் மகாவித்தியாலயம், ஓய்வுபெற்ற உப அதிபர், பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயம்)

மூளாய் தெற்கு, ஐயனார் கோயிலடி வாசியும், தற்போது புத்தளம் நகரில் வசித்தவருமாகிய ஆறுமுகம் சுப்பையா அவர்கள் நேற்று (21-11-2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-15 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சு. தவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், திருமதி நடராசா – ஜயலக்ஷ்மிதேவி, சண்முகசிவானந்தன் (பிரதம பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், புத்தளம்), திருமதி சிவதட்சணாமூர்த்தி ஆனந்தவல்லி (பிரதேச செயலகம், சங்கானை - வலி. மேற்கு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சி. நடராசா, திருமதி ச. லோகநாயகி, தி. சிவதட்சணாமூர்த்தி (உதவிப் பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சி. கரப்பிரியா (மாநகரசபை, யாழ்ப்பாணம்), சி. ரேணுகாதேவி, சி. கபிலன், சி. சிறிலதா, ந. சியாம்ராஜ், ச. கஜானன், ச. சோபிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும், கொல்லங்கலட்டி சீனிவாசகம் தம்பதிகள், மந்துவில் செல்வதிசநாயகம் தம்பதிகள், சங்கானை, தொட்டிலடி திருநாவுக்கரசு தம்பதிகளின் மதிப்பிற்குரிய சம்பந்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22 11—2000) புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அவரது மகனின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புத்தளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. சிவதட்சணாமூர்த்தி (மருமகன்)
(உதவிப் பணிப்பாளர், தே. இ. சே. மன்றம்,
யாழ்ப்பாணம்)

தொட்டிலடி,
சங்கானை கிழக்கு,
சங்கானை.

(80772)

# சட்டவிரோத மின் பாவனையைத் தடுக்க மக்கள் ஒத்துழைப்பு அவசியம்

## மின்சாரசபை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கினாலேயே சட்டவிரோத மின் பாவனையாளர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று மின்சார சபை அதிகாரிஒருவர்தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக சட்ட விரோதமாக மின் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனால் சாதாரண மின்பாவனையாளர்கள் பெரும்பாதிப்படைகின்றனர்.

மின்சாரசபை இது குறித்து கூடிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்தும் முழுமையான பயன் கிடைக்கவில்லை. இரவிலேயே இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகள் கூடுதலாக இடம்பெறுகின்றன. இதனால் பகலில் எவ்வளவுதான் நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் முழு அளவில் அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தற்போதைய சூழ்நிலையில் இரவில் சென்று இதனைக்கட்டுப்படுத்தமுடியாமலுள்ளது.

சட்டவிரோத மின் பாவனையாளர்களால் முறையாக மின் பெற்ற பாவனையாளர்களே பெரும் பாதிப்புக்குஉள்ளாகின்றனர். இதனைத் தடுக்க பொதுமக்களே முன்வரவேண்டும். முறைகேடாக மின்சாரம் பெறுபவர்களை இனங்கண்டு அவர்களது சட்டவிரோதச் செயல்களை தடுத்து நிறுத்த வேண்டும்.

எனவே சட்டபூர்வமான மின் பாவனையாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சட்டவிரோத மின் பாவனையாளர்களின் நடவடிக்கைகளை ஒடுக்க மின்சார சபைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இப்படிஅவர் மேலும் தெரிவித்தார். (ம)

## தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு அதன் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

★ ஆறுமுகம் கிருஷ்ணபிள்ளை — கைதடி தெற்கு, கைதடி.

★ துரைசிங்கம் விஜித்தா— மே/பா. ஏகாம்பரநாதன், வரணி, இயற்றாலை.

★ கனகலிங்கம் மாதன்— இந்திரபுரம், பளை. (ஐ)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், நவ. 22

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல் இன்று காலை 10 மணிக்கு ஆரியகுளத்திலுள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறும். 45 வயதுக்குக் குறைந்த ஆங்கில ஆசிரியர்களை சமுகம் தரும்படி கோரப்பட்டுள்ளது.

[ம]

## சாயிபாபா பிறந்ததின விழாக்கள்

யாழ்ப்பாணம், நவ. 22

ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பிறந்த நாளை ஒட்டிய விசேட நிகழ்ச்சி நாளை வியாழக் கிழமைஇரவு 9.15 மணிக்கு இலங்கை வானொலியின் யாழ். சேயிவைல் ஒலிபரப்பாகஉள்ளதாக பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவாசமித்தியினர் அறிவித்துள்ளனர். (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 22

கல்வியங்காடு ஸ்ரீ சத்திய சாயி பஜனை நிலையத்தில் பாபாவின் 75 ஆவது பிறந்த தின நிகழ்வு நாளை வியாழக் கிழமை பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை இடம் பெறும்.

மரம் நடுதல், பாலவிகாஸ் மற்றும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்குதல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறும். (ம-30)

★ ★ ★

கோப்பாய், நவ. 22

கோப்பாய் ஸ்ரீ சத்தியசாயி பாபா சமித்தியில் பாபாவின் 75 ஆவது பிறந்தின நிகழ்வுகள் நாளை வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத் தலைவர் நா. வி. மு. நவரெத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து பஜனையும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ம—72)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05-12-1929

உதிர்வு: 22-11-1998

### அமரர் கந்தையா அமிர்தலிங்கம்

(யாழ். போதனா வைத்தியசாலை ஓய்வு பெற்ற ஊழியர்)

ஆண்டு இரண்டு ஆனதையா
அன்பு முகம் பார்த்து
ஆண்டு ஆயிரமானாலும்
அகன்றிடுமோ உம் நினைவுகள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவில் துயருறும்:
குடும்பத்தினர்

17/4. சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (80692)

---

## பருத்தித்துறை நகராட்சி மன்றம் 2001 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

மீள் மதிப்பீடு செய்யப்பட்ட புதிய ஆதன வரித்தொகைகளை 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்குச் சபையால் தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய ஆதனவரி அறிவித்தல்கள் வரியிறுப்பாளர்களுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. வரியிறுப்பாளர்கள் ஆட்சேபனை ஏதும் இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை இவ்வறிவித்தல் பத்திரம் கிடைத்த 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் எனக்கு அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாதன வரித்தொகைகள் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31, ஜூன் மாதம் 30, செப்ரெம்பர் மாதம் 30, டிசெம்பர் மாதம் 31 ஆகிய திகதிகளில் முடிவுறும் காலாண்டுக்கு ஒரு தடவை செலுத்தப்பட வேண்டும். இவை ஆண்டுத் தொடக்கத்தில் முழுமையாகவும் செலுத்தப்படலாம். 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு ஆதனவரியையும் செலுத்தினால் 10% வரிக்கழிவும், காலாண்டுக்குரிய ஆதனவரியை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தினால் 5 % வரிக்கழிவும் வழங்கப்படும்.

காலாண்டு முடிவுறும் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் ஆதனவரித் தொகைகளுக்கு பற்றாணைச் செலவு அறவிடப்படும். அப்பற்றாணைச் செலவு வெற்றுக் காணிகளுக்கும் குடியிருக்கும் ஆதனங்களுக்கும் 15 % மாகவும், ஏனைய ஆதனங்களுக்கு 20 % மாகவும் இருக்கும்.

மேற்காட்டிய காலாண்டு முடிவுறும் திகதிகளிலோ அல்லது அதற்கு முன்னரோ அக்காலப் பகுதிக்குரிய ஆதனவரி செலுத்தப்படாவிட்டால் குடியிருப்போரின் பொருள்கள் நடுக்கட்டல் செய்யப்படும் என்பதைக் குடியிருப்பாளர்கள் கவனிக்க வேண்டும். வாடகைக்காரரர்கள் தாங்கள் குடியிருக்கும் ஆதனத்திற்குரிய வரியைச் செலுத்தி அத்தொகையை வாடகையில் குறைத்துக் கொள்ளலாம்.

சி. கமலேஸ்வரன்
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை,
20 - 11 - 2000 (சி-13928)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தமிழ் மக்களின் இன்னல்களைத் துணிவுடனும் நேர்மையுடனும் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் குரல் கொடுத்து வெளிப்படுத்தி வரும் பாராளுமன்ற உறுப்பினர்

### உயர்திரு. T. மகேஸ்வரன்

அவர்கள் மேலும் அப்புனித பணியை தமிழ் மக்களுக்காகத் தொடர வேண்டுமென வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல சந்நிதி முருகன் திருவருள் அவருக்குக் கிடைக்க வேண்டுகின்றோம்.

செல்வரத்தினம் செல்வராசா
குடும்பம்.

அரசடி வீதி,
வடலியடைப்பு. (80761)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும், தற்போது தொலைக்கல்வி இணைப்பாளரும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைச் செயலாளருமாகிய

### திரு. த. பஞ்சலிங்கம் அவர்கள்

அதிபர் தரம் ஒன்றிற்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளதையிட்டு அவரை உளமார வாழ்த்துகின்றோம்.

அவரது சிறந்த சேவை தொடரட்டும்.

ஆசிரியர் கழகம்,
யா / நாயன்மார்கட்டு,
மகேஸ்வரி வித்தியாசாலை.

(சி/13932)

---

## வாழ்த்துகின்றோம்

### யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின்

அதிபர்

### செல்வி பா. மார்க்கண்டு

அவர்கள்

அதிபர் தரம் 1 அடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பண்படுத்திப் பயிர் செய்யும்
பண்ணை நிறைந்த எம்மூரில்
பண்பாடு பேணவென்று அவதரித்த அம்மையே!
நற்குருவே குருவின் குருவே
கல்வித் தெய்வமே
வளமண் கோண்டாவிலாம்
நற்பதியின் சுடரொளியாய் இருக்கும் ஒளியே
உம் தரம் ஒன்று அதுவே நன்று
மிக நன்று என்று வாழ்த்துகின்றது
கோண்டாவில் குமரகோட்டம்
சனசமூக நிலையம் இன்று.

கோண்டாவில்
குமரகோட்டம்,
ச. ச. நிலையத்தினர்.

(80762)

---

உ

ஓம் ஸ்ரீ சாயிராம்
சாயி மந்திர்
[பிரதான வீதி, பருத்தித்துறை]

## பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 75-வது ஜயந்திதின நிகழ்ச்சிகள்

23 - 11 - 2000 வியாழக்கிழமை

முற்பகல் 9.00மணி — மங்கள இசை

முற்பகல் 9.30 மணி- பிரசாந்திக் கொடியேற்றம்.
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்.(நந்தி)
தேசிய கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
சத்தியசாயி மனிதமேம்பாட்டுக் கல்வி-இலங்கை

முற்பகல் 9.40 மணி- ஓம்காரம்
விநாயகர் அபிஷேகமும் பூஜையும்
பாதுகாபிஷேகமும் பூஜையும்

முற்பகல் 10.40மணி- அஷ்டோத்தரம், பஜனை

முற்பகல் 11.40மணி- 'அன்புத் தெய்வம் பாபா'
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்(நந்தி)
தேசிய கல்விப்பணிப்பாளர் (தமிழ்)
சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வி- இலங்கை

பிற்பகல் 12.30 மணி- மங்கள ஆராத்தி

பிற்பகல் 1.00 மணி- நாராயண சேவை
இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜெய்சாயிராம்

நிர்வாகக்குழு,
சாயிமந்திர்,
பருத்தித்துறை

(80749)

# கோப்பாய் தெற்கு, அத்தித் தோட்டம்
## அருள்மிகு
# பரமேஸ்வரி அம்பாள் ஆலய
## விக்கிரம வருஷ
# மணவாளக் கோல விழாவும் சங்காபிஷேக விஞ்ஞாபனமும்

விக்கிரம வருஷம் கார்த்திகை மாதம் 7 ஆம் நாள் இன்று (22-11-2000) புதன்கிழமை அத்த நட்சத்திரம் கூடிய சுப வேளையில் அம்பாளுக்கு 108 சங்குகளால் விஷேட சங்காபிஷேகம் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் அதனைத் தொடர்ந்து விஷேட பூஜையும் இடம்பெறும்.

சங்காபிஷேக பிரதம குரு:-
சிவஸ்ரீ சோ. நடராஜக் குருக்கள் (நல்லூர்)

ஆலய பிரதம குரு:-
பிரம்மஸ்ரீ ச. செம்பொற்சோதி சர்மா
(கோப்பாய்)

அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பாளின் இறையருளைப் பெற்றுய்வீர்களாக!

விளம்பர அன்பளிப்பு:-

உரிமையாளர்
வன்னியசிங்கம் விஜயபாலா
**லாலா சோப் தொழிலகம்**
அச்சுவேலி. (சி/13900)


## ஈச்சமோட்டை வீடுகளில் தொடர் திருட்டு

கொழும்புத்துறை, நவ. 22

போர்ச்சூழல் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்த ஈச்சமோட்டைப் பகுதியில்— வீடுகளில் தொடர்ச்சியாக பொருள்கள் திருடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடிக்கடி இடம் பெறும் இத்திருட்டுக்களில் ஒரு குழுவினரே ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.

(ம-30)

## படகுச் சேவை மழையால் பாதிப்பு

நெடுந்தீவு, நவ. 22

கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் பலத்த மழை காரணமாக நெடுந்தீவு படகுச்சேவைகள் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவில் இருந்து காலை 7 மணிக்குப் புறப்படும் படகுகள் கூடாரமற்ற திறந்த படகுகளாக இருப்பதால் மழை பெய்யும் நான்களில் காலையில் அங்கிருந்து ஆரம்பமாகும் சேவைகளும் பிற்பகலில் குறிகாட்டுவானில் இருந்து புறப்படும் சேவைகளும் அடிக்கடி ஸ்தம்பிதமடைகின்றன இதனால் நெடுந்தீவு மக்கள் தமது அன்றாட அலுவல்களைப் பூர்த்தி செய்ய முடியாதவாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ம-111)


# பாராட்டிக் கௌரவிக்கின்றோம்

யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர்
**செல்வி பா. மார்க்கண்டு**
அவர்கள் அதிபர்கள் சேவை தரம் (1) ஒன்றுக்குப் பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரைப் பாராட்டிக் கௌரவிப்பதுடன் மேலும் பல உயர் பதவிகள்பெற்று, கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீமகா கணபதிப் பிள்ளையாரின் அருள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் கோயில்
(காளிகோயில்)
பரிபாலன சபையினரும்
கோண்டாவில் தென்மேற்கு
கிராம அபிவிருத்திச் சங்கமும்.
(80746)

# நன்றி நவில்கின்றோம்

யாழ்ப்பாண மாவட்டத்தில்
கல்வி மாணிப் பயிற்சி நெறியை (B. Ed)
அறிமுகப்படுத்துவதற்கும் அதற்கான புதுமுகத் தேர்வை நடத்துவதற்கும் அயராது உழைத்த

கௌரவ அமைச்சர்
**டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும்
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்
கலாநிதி
**ச. நா. தணிகாசலம்பிள்ளை**
அவர்களுக்கும்
தேசிய கல்வி நிறுவன பணிப்பாளர் நாயகத்துக்கும்

எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் பல பயிற்சி நெறிகளை அறிமுகப்படுத்த இவர்கள் உழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

கல்விமாணிப் பயிற்சி
புகுமுக மாணவர்கள்.
(80752)

# Personal Classes Computer Studies M.C.I.

வசதியான நேரங்களில் பிரத்தியேகமான கணனிப் பயிற்சி வகுப்புகள் உத்தியோகத்தர்களுக்கு உகந்தது. சிறுவர்களுக்கு விசேட வகுப்புகள்.

- ★ MS WORD 2000
- ★ MS EXCEL 2000
- ★ PAGE MAKER
- ★ COR
- ★ SPECIAL COURSE FOR CHILDREN DURATION - 2 MONTHS

ஆரம்பம்:- 01.12.2000 மாலை 5.00 மணி
விண்ணப்ப முடிவு திகதி:- 27-11-2000

ப. சிவானந்த சர்மா B. A (Hons)
(கோப்பாய் சிவம்)
கந்தசாமி கோயில் தெற்கு வீதி,
இணுவில்.
(80738)


# வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்.
# மீள் கேள்வி அறிவித்தல் - 2001

*கேள்விப்பத்திரம் விநியோகித்தல் —*
29 – 11 – 2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை

*கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதியும், நேரமும் —*
30 – 11 – 2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு

*கேள்வி திறக்கும் திகதியும் நேரமும் —*
30 – 11 – 2000 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி

இக் கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| சந்தை/இறைச்சிக்கடைகள் சருவாட்டுக் கடைகள் | கடையின் மாதாந்த வாடகை | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக் கப்படும் கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப் படும் தொகை |
|---|---|---|---|---|
| **1) மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1. காக்கைதீவுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 300/- | 1500/- | 15000.00 |
| 2. நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1500/- | 15000.00 |
| 3. சாவற்கட்டு சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 300/- | 1500/- | 40000.00 |
| 4. சாவற்கட்டு சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1500/- | 5000.00 |
| 5. சாவற்கட்டு சந்தை கருவாட்டுக் கடை | 100/- | 300/- | 1000/- | 2000.00 |
| **2) பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1. மாசியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1500/- | 20000.00 |
| 2. மாசியப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 250/- | 300/- | 1500/- | 8000.00 |
| 3. இளவாலைச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | — | 300/- | 1500/- | 12000.00 |
| **3) பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1. பண்டத்தரிப்புபொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | — | 300/- | 1500/- | 150000/- |
| 2. பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கருவாட்டுக் கடை இல. 01 | 250/- | 300/- | 1000/- | 7000/- |
| 3. பண்டத்தரிப்பு பொதுச் சந்தை கருவாட்டுக் கடை இல. 02 | 250/- | 300/- | 1000/- | 7000/- |

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்,
(ஜே. பி. யு. எம்)
தலைவர்,
வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை,
தலைமைச்செயலகம்,
நகரமண்டபம், மானிப்பாய்.
20 – 11 – 2000 சி/13927)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி பாலையா கிருஷ்ணகுமாரி

தோற்றம் 10 - 03 - 1943
மறைவு 23 - 10 - 2000

எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும்
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் நினைவு என்றென்றும் மறையாது.

பிள்ளைகள்.
K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (80757)

உதயன்

## நுளம்புப் போராட்டம்

''டெங்கு''க் காய்ச்சல் பரவுவது தென்னிலங்கையில் ஒரு பெரும் விவகாரமாக — ''தேசியப்'' பிரச்சினையாக — மாறியுள்ளது. அந்த நோயினால் நாற்பதுக்கும் மேற்பட்டோர் மாண்டுள்ளனர்.

இந்தப் பொல்லாத வியாதியை உண்டாக்கும் ''ஈடிஸ் இஜிப்ரை'' என்ற நுளம்பு வகை யாழ்ப்பாணத்திலும் உள்ளதால் ''டெங்கு''க் காய்ச்சல் இங்கும் பரவும் சாத்தியம்— ஆபத்து — உண்டுஎன்று வைத்திய வட்டாரங்கள் எச்சரிக்கின்றன.

குடாநாட்டில் பெருமழை பெய்யத் தொடங்கிவிட்டதால் நுளம்புப்பெருக்கம் உண்டாகும் என்பது நிச்சயம். நுளம்பினால் நோய்கள் பரவிய பின்னர் அதன் பாதகமானவிளைவுகளை அனுபவிப்பதைவிட, நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதிலேயே மக்களின் சுகநலனைக் காப்பாற்றுவது தங்கியுள்ளது.

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்திருப்பது போல, யாழ். நகரத்தில் நுளம்பு பெருகுவதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன. கோடைகாலத்திலேயே நுளம்புத் திரியின் துணையின்றித்துயில்வது சிரமமான காரியமாகிஇருந்தது.

நகரவாசிகளில் பலர் இடம்பெயர்ந்திருப்பதனால் அவர்களின் வீடுகளில் பற்றைக்காடுகள் வளர்ந்து நுளம்புப் பெருக்கத்துக்கு உதவி அயலவர்களைப் பகலும் இரவும்பதம் பார்த்து வருகின்றன. மிதிவெடிகள் உள்ளதாகச் சந்தேகிக்கப்படும் அல்லது இனங்காணப்பட்ட வளவுகளிலும் காடுமண்டியுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக நகரவாசிகள் தங்கள் வீட்டுக் குப்பைகள் மற்றும் அழுக்குகளை வீதிகளில் போட்டு சுகாதாரக் கேடு உண்டாக்குகிறார்கள். இவை நுளம்புப் பெருக்கத்தை அதிகரிக்கின்றன.

இப்போதெல்லாம் கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களைப்போலவே நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது.

மழை பெய்த கையோடு நுளம்பு பெருகுவது வழமை. அதனைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளில் உள்ளூராட்சி சபைகளும் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து உடன் செயலில் இறங்க வேண்டும். நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதில் நிலைமைக்கு ஏற்ப அவசர நடவடிக்கை எடுக்கப்படாவிடில் தென்னிலங்கைபோன்று 'டெங்கு'க் காய்ச்சல் பிரச்சினை இங்கும் தலையெடுக்கும். சனசமூக நிலையங்கள் போன்ற மக்கள் அமைப்புகளும் நுளம்புப் போராட்டத்தில் சுகாதாரப் பகுதியினருக்கும் பக்கத்துணையாக இருப்பது அவசியம்.

இதுவிடயத்தில் மக்கள் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புடனும் செயற்பட வேண்டும். ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்ததைவிட, மலேரியா மற்றும் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை இப்போது குடாநாட்டில் அதிகரித்துள்ளது. ''டெங்கு''க் காய்ச்சலும் அத்தகைய ஓர் இடத்தைப் பெறாமல் பார்த்துக் கொள்வது மக்கள் தமது சுகாதாரத்தைப் பேணுவதிலேயே தங்கியுள்ளது. ஒவ்வொருவரும் இதனைத் தமது தனிப்பட்ட ஆரோக்கியப் பிரச்சினையாக— உயிர்ப்பிரச்சினையாக— கருதிச் செயற்பட வேண்டும். அப்போதுதான் அவர்களால் நுளம்புத் தடுப்பில்— நுளம்புப் போராட்டதில் —நோய்த்தடுப்பில்— உணர்வு பூர்வமாக, விதிவிலக்கின்றிச் செயற்பட முடியும். தனியாள் சுகாதாரமே; சமூகச் சுகாதாரம்.

### 2யூதர்கள் கொல்லப்பட்டதையடுத்து

# இஸ்ரேலிய விமானங்கள் காஸாவில் குண்டு வீச்சு!

## பலஸ்தீன வானொலி நிலையம் தரைமட்டம்

காஸா, நவ. 22

காஸாவில் பாடசாலை பஸ் வெடிகுண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி இரு இஸ்ரேலியர்கள் இறந்ததையடுத்து இஸ்ரேலிய விமானங்கள் கடும் ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை காலை யூதக் குடியிருப்புகளில் இருந்துஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் மீது வெடிகுண்டு வீசப்பட்டது. இதில் பஸ்ஸில் பயணம் செய்த இரு ஆசிரியர்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்துக் காஸாப் பகுதியில் இஸ்ரேலிய விமானங்கள் பாரிய அளவில் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தின. காஸா முழுவதும் நிமிடத்துக்கு ஓர் ஏவுகணை வீதம் விழுந்து வெடித்ததாக நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

குண்டு வீச்சால் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுக் காஸா இருளில் மூழ்கியுள்ளது.

எகிப்திய எல்லை அருகே உள்ள ராஹ்ஸா, கிரான் யூனிஸ் ஆகிய முக்கிய பலஸ்தீன நகரங்களில் தாக்குதல் அதிகமிருந்ததாகவும் —

இப் பகுதியில் அரபாத்தின் இல்லம் மற்றும் அலுவலகத்தின் அருகே இயங்கி வந்த பலஸ்தீனச்செயற்கைக்கோள் தொலைக்காட்சி நிலையம் தரைமட்டமானதாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேலிய அமைச்சரவைச் செயலர் எர்கத் எர்ஷவ் தேசிய வானொலியில் உரையாற்றுகையில், பஸ் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக, அரபாத்தும், மற்றைய பலஸ்தீனர்களும் புரிந்துகொள்ளும் நோக்குடனேயே இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதலை மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.

காஸாவில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிலையால் மேற்காசிய சமாதான முயற்சிகள் பின்தள்ளப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் 28 ஆம் திகதி முதல் மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதிகளில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே தொடர்ந்து இடம்பெற்று வரும் மோதல்களில் இதுவரை 240 பேர் பலியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

# 70 ஆண்டுகள் சிறை என்றாலும் ஈழத் தமிழர் பற்றிப் பேசுவோம்

## பா. ம. க. தலைவர் ராமதாஸ் உறுதி

புதுவை, நவ. 22

ஈழத் தமிழருக்கு ஆதரவாகப் பேசினால் 70 ஆண்டுகள் சிறைத்தண்டனை என்றாலும் அவர்களுக்கு ஆதரவாகப் பேசத் தயங்கமாட்டோம் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் உறுதி தெரிவித்தார்.

புதுச்சேரியில் பா. ம. க. வின் இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே ராமதாஸ் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்;—

நாங்கள் தமிழ் உணர்வை வெளிப்படுத்துபவர்கள். ஈழத் தமிழர்களைப் பற்றிப் பேசினால் தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்தால் 7 ஆண்டு சிறைத் தண்டனை என்று கூறப்படுகிறது.

7 ஆண்டுகள் அல்ல, 70 ஆண்டுகள் சிறையில் அடைத்தாலும் தொடர்ந்து ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசுவோம்.

என்னைக் கைது செய்து சிறையில் அடைத்தால் எனது மகன் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசுவான். அவனைக் கைதுசெய்தால் எனது பேரன் பேசுவான் என்று தெரிவித்தார்.

நடிகர் ராஜ்குமார் வீரப்பனால் கடத்தப்பட்டது பற்றிக் குறிப்பிடுகையில்—

விசிறிகள் சுட்டுக்கொன்றனர். இருந்தாலும் ராஜ்குமார் பத்திரமாக மீட்கப்படவேண்டும் என்றுதான் நாம் கூறிவந்தோம். வீரப்பன் தமிழ் உணர்வு கொண்டவன், இதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அதே சமயம், பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரை நாம் தமிழ் உணர்வோடு அனைத்துச் சமுதாய மக்களையும் அரவணைத்துச் செல்வோம். வன்முறையில் ஒரு துளிகூட எமக்கு நம்பிக்கையில்லை. என்று ராமதாஸ் கூறினார் (ஒ-6)

### உதய அரங்கில்

காவிரி நதி தொடர்பான கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குக் குடிநீர் வழங்கியதற்காக 6 பொலீஸ்காரர்களை ராஜ்குமாரின்

## அதிகாரி மீது மானபங்க வழக்கு

ஹரியானா பொலீஸ் துறைத் தலைவர் ராத்தோர் மீது 10 ஆண்டுகளின் முன்னர் ஒரு பெண்ணை மானபங்கப் படுத்தியதாகத் தற்போது தொடரப்பட்டுள்ள வழக்கில் ராத்தோர் நேரில் சமுகமளித்து தனது தரப்பு விளக்கங்களைத் தெரிவிக்கும்படி பஞ்சாப்பில் அம்போலா மத்திய புலனாய்வு நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

**உதயவாக்கு**

இறைவனுக்குப் பல பெயர்கள் உண்டு; எனினும் அவன் ஒருவன் தான்.

—அரிஸ்டாட்டில்

## நாளை

**கார்த்திகை 8**

**வியாழக்கிழமை**

திதி: திரயோதசி பின் இரவு 4. 39 வரை.

நட்சத்திரம்: சித்திரை பி.ப. 3 . 39 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்:07 41— 09.11

ராகுகாலம் 01.41 — 3.11

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### இந்திய அரசு அறிவித்துள்ள

## தாக்குதல் நிறுத்தத்தை ஏற்க காஷ்மீர் தீவிரவாதிகள் மறுப்பு

புனித றம்ழான் நோன்பு நாள்களில் காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு எதிரான படை நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் இந்திய அரசின் முடிவை தீவிரவாத அமைப்புகள் ஏற்க மறுத்து விட்டன. றம்ழான் மாதத்திலும்இந்திய ராணுவநிலைகள் மீதுதாக்குதல்களை நடத்தப்போவதாகப்பெரும்பாலான காஷ்மீர் விடுதலை அமைப்புகள் அறிவித்துள்ளன.

கடந்த ஜூலை மாதம் தாமாக முன்வந்து தாக்குதல் நிறுத்தம் மேற்கொண்ட ஹிஸ்புல் முஜாஹிதீன்கள் மட்டும் இதுவரை இந்திய அரசின் முடிவுதறித்து கருத்து எதனையும் தெரிவிக்காமல் மௌனம் சாதித்து வருகிறது.

இதற்கிடையில்,

புனித றம்ழான் மாதத்தில் தலைநகர் டில்லியில் நாச வேலையில் ஈடுபடத் திட்டமிட்டிருந்த ஹிஸ்புல் முஜாஹிதின் அமைப்பைச் சேர்ந்த முகமது ரஃபி என்பவரை டில்லி ரயில் நிலையத்தில் கைது செய்துள்ளதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தைச் சேர்ந்த ரஃபியிடமிருந்து 2.5 கிலோகிராம் ஆர். டி. எக்ஸ் வெடிப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகவும் டில்லிப் பொலீஸார் கூறியுள்ளனர். (ஒ-8)

## ஐ. நா. சட்டவரைவுக்குட்பட்டு கோசோவோவுக்குத் தன்னாட்சி

ஐ. நா. பாதுகாப்பு அவையின் சட்டவரைவின்படி கொசோவோவில் தன்னாட்சி மேற்கொள்ளப்படும் என்று யூகோஸ்லாவிய அதிபர் கொஸ்டுனிகா உறுதி தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஐ. நா. பாதுகாப்பு அவையின் 1244 ஆவது இலக்கத் தீர்மானத்தின்படி கொசோவோவுக்கு நியாயமான சுயாட்சி உரிமை வழங்கப்படும்.

அதே சமயம் யூகோஸ்லாவிய ஒன்றியத்தின் அரசுரிமையும், உரிமைப் பிரதேசத்தின் ஒருமைப்பாடும் பேணிக் காக்கப்படவேண்டும்.

இவ்வாறு அந்தப் பேட்டியில் தெரிவித்த கொஸ்டுனிகா செர்பியக் குடியரசுக்கும் மொன்ரிநீக்ரோக் குடியரசுக்கும் இடையேயான சிக்கல்களுக்குப் புரிந்துணர்வின் அடிப்படையில் பேச்சு வார்த்தைக்கானசூழலை உருவாக்கி இரு தரப்பு மக்களின் விருப்பங்களுக்கு மதிப்பளித்து முடிவுகள் எடுக்கப்படும் என்றும் கூறினார்.

யூகோஸ்லாவியாவில் செர்பியா, மொன்ரிநீக்ரோ ஆகிய இரு குடியரசுகள் அடங்கியுள்ளதும்,

சேர்பியக் குடியரசின் ஒரு பகுதியான கொசோவோவில் அல்பேனியர்கள் பிரிவினை கோரி வருவதும் தெரிந்தவையே. (ஒ-7)

## மியான்மருடன் இந்தியா மீண்டும் உறவு

புதுடில்லி, நவ. 22

மியான்மர் நாட்டுடன் மீண்டும் நெருங்கிய அரசியல் பிணைப்புகளையும், வலுவான பொருளாதார உறவுகளையும் ஏற்படுத்த இந்தியா தீர்மானித்துள்ளதாக இந்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இராணுவ ஆட்சி நடைபெற்றுவரும் மியான்மருடன் நீண்டகாலமாக மட்டுப்படுத்தப்பட்ட உறவு நிலையை இந்தியா மேற்கொண்டு வந்ததும் அங்கு ஜனநாயக ஆட்சி ஏற்படாத நிலையில் உறவு நிலை மாற்ற அது முடிவு செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கவை (ஒ-8)

## அகதிகள் சென்ற படகு கவிழ்ந்தது

மண்டபம் நவ. 22

இலங்கையிலிருந்து தமிழ் அகதிகளை ஏற்றிவந்த படகு தனுஸ்கோடி அருகே கடலில் கவிழ்ந்தது. படகில் இருந்த 8 பேரும் சுமார் ஒருமணி நேரம் கடலில் உயிருக்குப் போராடி நீந்திக் கரை சேர்ந்தனர்.

கரையருகுக்குச் சமீபமாக இருந்த மூத்தராயன் சத்திரம் சோதனைச் சாவடிக்கு வந்து சேர்ந்த அவர்கள் தற்போது மண்டபம் சிறப்பு அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-8)

## டில்லியில் கலவரம்

டில்லியில் சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் தொழிற்சாலைகளை மூடும் மாநில அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் நேற்று முதல் வன்முறையாக மாறியுள்ளன.

டில்லியின் மத்திய பகுதியில் வன்முறைக் கும்பலைக் கலைக்கப் பொலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார். அப்போது நடந்த மோதல்களில் 85 பொலீஸார் காயமடைந்தனர்

## தோல்வி

ஜப்பானிய நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் பிரதமர் யோஷிரோ மோரிக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்தது.

மொத்தம் 480 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் பிரேரணையை எதிர்த்து 237 வாக்குகளும் ஆதரவாக 190 வாக்குகளும் கிடைத்தன. 53உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வில்லை.

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

YAMAHA MATE 50 பழைய மொடல் மோட்டார் சைக்கிள் 12 H.P, CHAINA லாண்ட்மாஸ்டர் மொடல் என்ஜின விற்பனைக்குண்டு. தொடர்பு: 109, சட்டநாதர் வீதி, நல்லூர். (80708)

National 20" கலர் T.V, பனசோனிக் SD 225 டெக், சிறீராம் கொண்டா 650, SONY றேடியோ, சிங்கர் குளிர் சாதனப் பெட்டி, புதிய National Rice Cooker மற்றும் மின்சாரப் பொருள்கள், சகல தளபாடப் பொருள்கள், சமையலறைப் பொருள்கள் முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு: "பத்மா வாசம்" சில்லாலை, பண்டத்தரிப்பு. (80726)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80710)

### வாங்கப்படும்

திருத்த முடியாத T.V. டெக் உதிரிப்பாகங்கள் வாங்கப்படும். தொடர்புகளுக்கு: சதா, 284, ஸ்ரான்லி றோட், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (80735)

### MARRIAGE PROPOSALS

Roman Cathalic Canada citizen hand some male Engineer needs a Suitable partner Date of Birth 13.12.1969. Advt. No.1142. C/o Uthayan, Jaffna. (80737)

### தவறிவிட்டது

கடற்கரை வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த இராசையா இரஞ்சன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 662753467v), விசேட அடையாள அட்டை (0901025959) இரண்டும் 18.11.2000 அன்று நெல்லியடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (80733)

திருநெல்வேலி கிழக்கு, கேணியடியைச் சேர்ந்த இளையதம்பி தனபாலசிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 393000104v) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பெருமாள் கோயிலில் ஒப்படைத்து உதவவும். (80736)

கைதடி தெற்கு, கைதடி எனும் முகவரியைச் சேர்ந்தவர்களான முருகன் தெய்வானை என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 645422185v) விசேட அடையாள அட்டையும் மற்றும் சிவராசா உதயன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (09100Ì754) என்பன சுன்னாகம் சந்தைக்கும் தபால் கந்தோருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கைதடி பல நோ.கூ.சங்கம், இணுவில் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (80755)

**அளவையியல்**

S.R.J.சுதன்

**A/L 2002** பிரிவு I

குறியீட்டு அளவையியல்

ஆரம்பம்:- 25.11.2k sat. 4.45p.m.

**A/L 2001** பிரிவு II

பகுதி II. கருதுகோள்

ஆரம்பம்:- 26.11.2k sun. 4.45 p.m.

**கலையகம்**

ஆவரங்கால், புத்தூர். (80737)

**I.B.S** கோயில் வீதி, (I.C.R.C.அருகில்)

* புதிய கல்வியாண்டு 2001 **DECEMBER 8** இல்

* தரம் 4 முதல் **O/L** வரையும்.

புதிதாக இணையும் மாணவர்களுக்கு கட்டணத்தில் சலுகை.

இச்சலுகை **DEC. 10** வரை.

(80742)

தரமான ஆசிரியர்கள் உயர்வான கல்வி.


# சங்கீத, நடன ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.22

சங்கீத, நடன ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் தீவக வலய பாடசாலைகளுக்கு 4 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கே.விஜயராணி(பாஷையூர்), எஸ்.சுகன்யா (அராலி மேற்கு), கே.கஜன் (இணுவில் மேற்கு), என்.மாதினி(சண்டிலிப்பாய்) ஆகியோரே நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக அவற்றைப் பெற்று கடமையைப் பொறுப்பேற்குமாறு தீவக கல்விவலயப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டோருக் கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளாதோரும் தீவக கல்வி வலய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ம)

## 45ஆம் நாள் நினைவுதினம்



பிறப்பு 10 - 08 - 1972

இறப்பு 09 - 10 - 2000

### அமரர் யோகநாதன் கியூபேட் (றஜீஸ்)

நேற்றுச் சிரித்தபடி நிஜமாய் இருந்தவனே!
காற்றாகி இன்றேன் கடிதில் பிரிந்துவிட்டாய்!
கனவுகள் சூடி எம் தொழிலகம் வந்தவனே,
கனவுகள் சேரமுன்பேன் காலன் உன்னைப் பறித்தான்?
சொல்லாமல் போனதெங்கு? தோழமைகள் ஏங்குகிறதே!
நில்லாயோ? எங்கள் மனம் தொட்டுப் பேசாயோ?
உள்ளங்கள் கதற இங்கு ஏங்கித் தவிக்கின்றோம்!
வெள்ளத் துயர்வடிய வந்து கண்கள் துடைக்காயோ?

இவரின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சன் றெக்கோடிங் ஸ்பொட்,**
*24/2, பெரியகடை, யாழ்ப்பாணம்.*

(80741)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### வயிரவிப்பிள்ளை வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற போமன், புகையிரதப் பகுதி, கரம்பகம், மிருசுவில்.)

தோற்றம்: **01-10-1918**

மறைவு: **24-10-2000**

24-10-2000 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு நாளை (23-11-2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

* இடம்பெயர்வு காரணமாக சகலரையும் நேரில் சந்திக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். அனைவரையும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தகவல்:
வே.பேரின்பராசா
*(கிராம அலுவலர், மிருசுவில்.)*

தற்காலிக முகவரி:
*இந்துக்கல்லூரி வீதி,*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.*

(80728)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி பாலையா கிருஷ்ணகுமாரி

தோற்றம் **10-03-1943**

மறைவு **23-10-2000**

துணையைத் துண்டித்தது பேய்கள் - அதனால்
துன்புறுத்தியது உன்னை நோய்கள்...
தாங்கியே நின்றன சேய்கள் - ஆயினும் நீ
சரிந்தே ஆகின முப்பத்தோர் நாள்கள்
நாள்கள் யுகமானாலும் நெஞ்சில் உன் நினைவோடு...

**திரு.நடராசா இராகுலன் குடும்பம்.**

*கனகசபை அவென்யூ,*
*யாழ்ப்பாணம்.*

(80743)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 25 - 12 - 1900

இறைவன் அடியில் 19 - 11 - 1995

### அமரர் இளையதம்பி கனகசபாபதி

(ஓய்வு பெற்ற மலாயன் பென்சனியர்)

22-11-2000

அன்பின் அப்பாவே! ஆண்டுகள் ஐந்தாகியும் ஆறவில்லை எம்துயர்!
காலங்கள் மாறலாம் காட்சிகள் மாறலாம்
ஆனால் உங்கள் இனிய முகம் என்றுமே மாறாது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(80564)

## 45 ஆம் நாள் நினைவு தினம்



பிறப்பு 10 - 08 - 1972

இறப்பு 09 - 10 - 2000

### அமரர் யோகநாதன் கியூபேட் (றஜீஸ்)

(ஊழியர், ஷன் றெக்கோடிங் ஸ்பொட்.)

வானத்து வெண்ணிலா இன்று
அஸ்தமித்துப் போனது ஏன்?
குதூகலச் சிரிப்பு இன்று
அடங்கி விட்டதுமேன்?
சிரிக்கின்ற உன் அன்புள்ளங்கள் எல்லாம்
கண்ணீர் வடித்திடவே - நீ
ஒரு வார்த்தை கூறாமல்
நித்திரைக்குச் சென்று விட்டாய்!
அன்புக்கு சரிநிகர் உனக்கு நீயேதானையா!
வாழ்விலும் தாழ்விலும் எம்முடனே
பாச விளக்காய் ஒளிர்ந்தவனே!
நாம் கதறுகின்ற ஒலிமட்டும் - நின்
கல்லறையில் கேட்கின்றதோ - உனை
மறந்துதான் நாம் வாழ முடியுமோ
இப்புவியில் நாம் வாழும்வரை?

இன்று (22-11-2000) யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலிப் பூசையில் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*(பூசை முடிந்தபின் வீட்டுக்கு வரவும்)*

இவரின் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், பெற்றோர், சகோதரர்கள், அம்மம்மா, நண்பர்கள், உறவினர்கள்.**

தற்காலிக முகவரி:
தாவடி வீதி,
சுதுமலை மேற்கு, மானிப்பாய்.

(80721)

# ஜீ.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை 2000 டிசெம்பர் நேர அட்டவணை

| | திகதி | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|---|
| 1 | 2000 டிசெம்பர் 11<br>திங்கள் | 46 ஆங்கில இலக்கியம் 0900-1200<br>49 வரலாறு } பகுதி I 0900-1000<br>பகுதி II 1000-1200 | 61 பாளி<br>63 அரபு<br>68 பிரெஞ்சு } 1300-1600 |
| 2 | 2000 டிசெம்பர் 12<br>செவ்வாய் | 21 சிங்கள மொழியும் இலக்கியமும் பகுதி I<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி I } 0900-0945<br>21 சிங்கள மொழியும் இலக்கியமும் பகுதி II<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி II } 1000-1200 | 21 சிங்கள மொழியும் இலக்கியமும் பகுதி III<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி III } 1300-1500 |
| 3 | 2000 டிசெம்பர் 13<br>புதன் | 31 ஆங்கில மொழி } பகுதி I 0900-1000<br>பகுதி II 1015-1215 | 12 சைவ சமயம்<br>13 இந்து சமயம்<br>14 கிறிஸ்தவம் (றோ.க)<br>15 கிறிஸ்தவம்<br>16 இஸ்லாம் } பகுதி I 1315-1415<br>பகுதி II 1430-1630 |
| 4 | 2000 டிசெம்பர் 14<br>வியாழன் | 45 கணிதம் I பகுதி II 0900-1200 | 45 கணிதம் I பகுதி I 1300-1400<br>42 கணிதம் II பகுதி I 1430-1530 |
| 5 | 2000 டிசெம்பர் 15<br>வெள்ளி | 42 கணிதம் II பகுதி II 0900-1200 | 62 சமஸ்கிருதம்<br>69 மலாய் } 1400-1700<br>விருப்பத்திற்குரிய சிங்களம்/தமிழ் 1400-1600 |
| 6 | 2000 டிசெம்பர் 16<br>சனி | அழகியற் பாடங்கள்<br>51 சித்திரம் } பகுதி I 0900-1000<br>பகுதி III 1015-1215<br>53 நடனம் (பரதம்)<br>55 சங்கீதம் (கர்நாடகம்)<br>56 சங்கீதம் (மேற்கத்திய) } பகுதி I 0900-1000<br>பகுதி II 1015-1215 | அழகியற் பாடங்கள்<br>51 சித்திரம் பகுதி II 1330-1530 |
| 7 | 2000 டிசெம்பர் 18<br>திங்கள் | 44 விஞ்ஞானம் I பகுதி II 0900-1200 | 44 விஞ்ஞானம் I பகுதி I 1300-1400<br>41 விஞ்ஞானம் II பகுதி I 1430-1530 |
| 8 | 2000 டிசெம்பர் 19<br>செவ்வாய் | 41 விஞ்ஞானம் II பகுதி II 0900-1200 | 48 தமிழ் இலக்கியம் 1300-1600<br>இரண்டாம் மொழி<br>64 சிங்களம்<br>65 தமிழ் } பகுதி I 1300-1400<br>பகுதி II 1415-1615 |
| 9 | 2000 டிசெம்பர் 20<br>புதன் | 43 வரலாறும் சமூகக்கல்வியும் பகுதி II 0900-1200 | 43 வரலாறும் சமூகக்கல்வியும் பகுதி I 1300-1400<br>92, 93, 94, தட்டெழுத்து தொகுதி I 1430-1630 |
| 10 | 2000 டிசெம்பர் 21<br>வியாழன் | 78, 79, 80, 87, 88, 89, 90, 95, 96, 97, 98, 99<br>தொழில்நுட்பப் பாடங்கள் } பகுதி I 0900-1000<br>பகுதி II 1000-1200<br>92, 93, 94 சுருக்கெழுத்து 0930முதல்<br>91 வர்த்தகமும் கணக்கியலும் பகுதி II 0900-1200 | 91 வர்த்தகமும் கணக்கியலும் பகுதி I 1300-1400<br>92, 93, 94, தட்டெழுத்து தொகுதி II 1430-1630 |
| 11 | 2000 டிசெம்பர் 22<br>வெள்ளி | விருப்பத்திற்குரிய ஆங்கிலம்<br>331 0900-1100<br>332 0900-1130<br>333 0900-1200 | |

## பயிற்சிகள் மீண்டும் வெள்ளியன்று

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.மாவட்டப் பாடசாலைகளைச சேர்ந்த 15 வயதுக்கு உட்பட்ட பிரிவு கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்வதற்காக யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்று வந்த பயிற்சிகள் மழை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மீள ஆரம்பிக்கப்படும் எனத தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஆண்டு இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை இன்று புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறும்.

6ஆம், 7ஆம், 8ஆம், 10ஆம் தரங்களுக்கான பரீட்சைகள் இன்று தொடக்கம் இம்மாதம் 30 ஆம் திகதி வரையும் -

3 ஆம், 4ஆம், 5 ஆம் தரங்களுக்கான பரீட்சைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி 4ஆம், 5ஆம், திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

9 ஆம் தரத்துக்கான பரீட்சைகள் பற்றிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் 11 ஆம் தரத்துக்கான பரீட்சை கடந்த 9ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று முடிவடைந்ததாகவும் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம் தெரிவித்தார்.

(இ-10-6)

## இடமாற்றச்சபை கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ். மாவட்ட வலயங்களுக்கிடையிலான இடமாற்ற சபை நாளை வியாழக்கிழமை காலை 11 மணிக்குக் கூடவிருக்கின்றது.

கஷ்டப் பிரதேசத்தில் நான்கு ஆண்டுகள் பணிபுரியும் ஆசிரியர்கள், வசதியான பிரதேசத்தில் ஆறு வருடங்கள் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோரின் இடமாற்ற விண்ணப்பங்கள் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன.

(இ-3)

IIS இன் கணனிக்கற்கைநெறிகளுக்கான 5000 மாணவர்களுக்கு
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2001

யாழ்மாவட்டத்தில் கடந்த 5வருடங்களுக்கு மேலாக தகவல் தொழில் நுட்பம் சார்ந்த ஓர் அறிவுசார் சமுதாயத்தை உருவாக்குவதற்காக சேவையாற்றிவரும் நாம் மாணவர்களின் வசதிகருதி புலமைப்பரிசில் திட்டமொன்றை ஆண்டுதோறும் நடைமுறைப்படுத்திவருகின்றோம். அவ்வடிப்படையில் இவ்வாண்டும் பொதுஅறிவு, நுண்ணறிவு பரீட்சையினூடாக யாழ்மாவட்டத்திலிருந்து 5000 மாணவர்களுக்கு கணனி கற்கைநெறிகளுக்கு புலமைப்பரிசில் வழங்க முன்வந்துள்ளோம்.



விண்ணப்ப முடிவுத்திகதி 25/11/2000

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

மேலதிக விபரங்களுக்கு....

Institute of Informatics Studies (IIS)

(பிரித்தானிய IMIS நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

தலைமை அலுவலகம் :
IIS, 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021-2831 E-mail : iis@sltnet.lk

கிளை நிறுவனம் :
IIS, நெல்லியடி, கரவெட்டி.

(C/13936)

# மாநகரசபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு தேநீர் அருந்திக் கதை கேட்பதால் பயன் உண்டா?

## மாநகர சுகாதார வைத்திய அதிகாரி கேட்கிறார்

யாழ்ப்பாணம்,நவ.22

நோயாளர்களையும் மற்றும் சிகிச்சை நிலைய சேவைகளையும் புறக்கணித்துவிட்டு மாநகரசபைக் கூட்டங்களில் பங்குபற்றி தேநீர் அருந்திக் கதைகளைக் கேட்பது ஒரு வைத்திய அதிகாரியின் கடமை அல்ல.

மேற்கண்டவாறு யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர்.தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரியை சபையின் சுகாதார குழுக் கூட்டங்களுக்கும் சபைக் கூட்டங்களுக்கும் சமுகமளிக்கச் செய்தல் வேண்டும் என்று மாநகரசபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்குப் பதிலளிக்கும் வகையில் அவர் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவித்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தங்கள் இன்றைய (21.11.2000) பத்திரிகையின் மாநகரசபைக் கூட்டம் பற்றிய செய்தியில் சுகாதார வைத்திய அதிகாரி சம்பந்தமாக ஒரு சில மாநகரசபை அங்கத்தவர்களின் கூற்று முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஆணையாளருக்கும், சபை முதல்வருக்கும் அனுப்பிய கடிதங்களின் பிரதிகளை தங்கள் கவனத்துக்காக அனுப்பி வைக்கிறேன்.

தங்களுக்கு கடந்த 18 வருட கால யாழ்ப்பாணத்தின் நிலை நன்கு விளங்கும். என்னைப் பொறுத்த வரை நானும் எனது பாரியாரும் வைத்தியர்கள் என்ற ரீதியில் யாழ்ப்பாணத்தை விட்டு ஓடி ஒளிக்காமல் எமது மக்களுக்கு சுகாதார ரீதியான எந்த விதமான இடர்களும் வராமல் சேவை செய்து வந்திருக்கின்றோம். தொடர்ந்தும் செய்வோம்.

யார் ஆட்சியில் இருந்தாலும் எமது சேவையை பக்கச்சார்பற்ற முறையில் வழங்கிவந்திருக்கின்றோம். இத்தகைய நிலையில் கடந்த பத்து வருடங்களாக மக்கள் துயர் தீர்க்கும் பணியில் யாழ்.மாநகரசபையின் சுகாதாரப் பகுதி தன் சேவையை வழங்கி வருகின்றது.

மக்கள் குறைகூறும் சுத்திகரிப்புச் சேவைகள் மற்றும் சூழல் அசுத்தமடைவதை தடுக்கும் சேவைகள் ஆணையாளரின் நேரடிக் கண்காணிப்பில் இயங்குவதினால் என்னால் அதற்குப் பொறுப்பேற்க முடியாது. எனது அல்லது சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனைகள் ஏனைய பகுதிகளினால் செயற்படுத்தப்படாத நிலையில் நிலைமையை மாற்ற முடியாது.

நோயாளர்கள் மற்றும் சிகிச்சை நிலையச் சேவைகளை புறக்கணித்து சகல மாநகரசபைக் கூட்டங்களிலும் பங்குபற்றி தேநீர் அருந்தி கதைகளைக் கேட்பது ஒரு வைத்திய அதிகாரியின் கடமை அல்ல என்பதை தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

ஏனைய மாநகர சபைகளின் மரபுக்கமைய நான் கடமையாற்றி வருகின்றேன். யாழ்ப்பாணத்தில் இயங்கும் (வளங்கள் குறைந்த நிலையிலும்) ஒரு சிறந்த சுகாதார சேவையாக மாநகரசபை சுகாதார சேவைகள் இயங்குகின்றன. காலத்தின் தேவை அறிந்து பல பயிற்சித் திட்டங்கள், சேவைகள் வழங்கப்படுகின்றன. இதனால் நோய்கள் பெருகாமல் கட்டுப்பாட்டில வைக்கக் கூடியதாகவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் தன் மக்களை நேசித்து பல இடர்களுக்கு மத்தியில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள் மற்றும் உயர் பதவி வகிக்கும் பொறியியலாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு துணையாக மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் இருந்தால்தான் எமது சமுகம் தற்போதைய கஷ்ட நிலையில் இருந்து மீள முடியும்.

'நன்மை செய்யாவிடினும் தீமை யாவது செய்யாதே' என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்வது அவசியம். அந்தப் பணியில் தங்கள் பத்திரிகை உதவ வேண்டும் என்று கோருகின்றேன் - என்றுள்ளது.

அதேசமயம் பிரதி மேயர் என்ரவிராஜுக்கு சுகாதார வைத்திய அதிகாரி அனுப்பியுள்ள கடிதத்தில் 'பொது மக்களுக்கான சேவையை வழங்கவே நான் விரும்புகின்றேன். கூட்டங்களுக்கு வந்து நேரத்தை வீணாககுவதை விரும்பவில்லை. எனது நிலைப்பாட்டை ஏற்க முடியாது விடடால் மாநகர அங்கத்தவர்களால ஏற்கக் கூடிய சுகாதார வைத்திய அதிகாரியை தாங்கள் நியமிக்கலாம்' என்று தெரிவித்துள்ளார். (இ-3)

## குருநகர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் தெரிவித்ததாவது:-

எனது கட்சிக்காரரான கதிர்காமநாதனை விளக்க மறியலில் வைத்திருப்பது சட்டத்துக்கு முரணானது.

குற்ற நடவடிக்கைக் கோவை 269 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்துக்கு வருகை தந்துள்ள நபர் ஒருவர் குற்றம் புரிந்ததாகச் சாட்சியம் இருந்தால் அவரை நீதிபதி நினைத்தால் விளக்கமறியலில் வைக்கலாம்.

இவர் இந்த வழக்கின் முறைப்பாட்டுக்காரர். இவரையே சந்தேக நபராக்கியுள்ளனர். இவர் குற்றம் செய்தார் என்பதை நீதிவான் திட்டவட்டமாகத் தீர்மானிக்க வேண்டும். என்ன குற்றம் என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்த வழக்கில் இரண்டும் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்றார்.

பதிலளித்து வாதாடிய அரச சட்டத்தரணி சசி மகேந்திரன், இந்த விவகாரம் அரச சொத்துக்கள் சம்பந்தமானது. பல இலட்சம் ரூபா கொள்ளையுடன் சம்பந்தப்பட்டது. இந்த விடயத்தில் நீதிமன்றம் பொறுப்புடன் நடக்க வேண்டும். அந்த வகையில் யாழ்.நீதிவான் நீதியின் சட்டத்திற்கு அமைவாக உத்தரவு பிறப்பித்துள்ளார். குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்ற அக்கறையுடன் செயற்பட்டுள்ளார் - என்றார்.

இந்த விசாரணை முடிவில் நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்ததாவது:-

பிரஸ்தாப நபரை 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், பதவி நிலை அதிகாரிகள் இருவரின் தலா இரண்டு லட்சம் ரூபா ஆள் பிணையிலும் செல்ல அனுமதிக்கின்றேன்.

தினமும் யாழ்.பொலீஸ் நிலையத்தில் அவர் கைச்சாத்திடவேண்டும்.

களஞ்சிய மோசடி தொடர்பாக இடம்பெறும் புலன் விசாரணைகளுக்கு களஞ்சியப் பொறுப்பாளர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதேசமயம் எந்த ஒரு பொலீஸ் குழுவும் சுதந்திரமாக விசாரணை நடத்துவதற்கு இந்தப் பிணை அனுமதி தடையாக இருக்க மாட்டாது- என்றார்.

இந்த விவகாரம் தொடர்பான செய்திகள் 'உதயன்' பத்திரிகையில் வெளிவந்துள்ளதால் பொதுமக்களின் கவனத்தையும் இது ஈர்த்துள்ளது என்றும் நீதிபதி தெரிவித்தார்.(இ-3)

## இரண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் திகதியில் இருந்து இரு மாதங்களுக்கே அது செல்லுபடியாகும் என்றும் -

அந்தக் காலப்பகுதியில் பயணத்தை மேற்கொள்ளாதவர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பித்து அதற்கான அனுமதியைப் பெற வேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர் அனுமதி பெற்றவர்களின் பாதுகாப்பு அனுமதிகளுக்கே தற்சமயம் பயண ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் - விமானப் பயணத்துக்கான பதிவுகள் மறுஅறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளன என்று வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அறிவித்துள்ளது.

தற்சமயம் பதிவு செய்துள்ளவர்கள் பயணத்தை மேற்கொள்வதில் நிலவும் தாமதம் காரணமாக இந்த வேலை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

512 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்தவர்களுக்கு பாதுகாப்பு அனுமதி கிடைத்துள்ளதா என்பதைப் பரிசீலித்து உறுதிப்படுத்தும் பணி இன்று காலை 8.30 மணிமுதல் இடம்பெறும் என்றும் -

511 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்தவர்கள் நாளை தமது அனுமதியைச் சரி பார்க்கலாம் என்றும் - அந்த சபையின் அதிகாரி எஸ்.குகராஜன் தெரிவித்தார். (இ-3)

## விமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்து வரப்பட்டனர்.

மீண்டும் இன்று காலை அவர்கள் பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட இருக்கின்றனர். அதே சமயம் இரத்மலானையிலும் பயணிகள் நேற்று ஏமாற்றம் அடைந்தனர். இரத்மலானையில் பயணிகள் விமானத்தில் ஏற்றப்பட்டதாகவும் -

இயந்திரக் கோளாறை அடுத்து அவர்கள் இறக்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## இனப்பிரச்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகளை முன்னெடுத்துச் செல்வது எனது விஜயத்தின் நோக்கங்களில் ஒன்று ஆகும். எனினும் அமைதி முயற்சிகளில் பிரிட்டன் நேரடியாக ஈடுபடமாட்டாது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதேவேளை பிரிட்டிஷ் தரப்பும் மத்தியஸ்தம் செய்வது என்பது காலம் கனிய முன் எடுக்கப்படும் நடவடிக்கையாகும்.

எனினும் இனப்பிரச்சினை இலங்கையின் அபிவிருத்திக்குத் தடையாக உள்ள காரணத்தினால் இது தீர்க்கப்பட வேண்டுமெனப் பிரிட்டன் விரும்புகின்றது.

இனப்பிரச்சினையில் தொடர்புபட்டிருக்கும் எவராலும் போரில் வெற்றி கொள்ளமுடியாது.

இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குவது தொடர்பான பிரிட்டனின் கொள்கை இறுக்கமானதாகவே இருந்து வருகிறது.

உள்நாட்டில் மக்களின் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடவோ, வெளிநாடுகளுடன் போரிடவோ பயன்படுத்தக்கூடிய ஆயுதங்களை நாம் இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதில்லை.

விடுதலைப் புலிகள் தமது தலைமையகத்தை லண்டனில் அமைத்து இயக்க எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. இப்படியான குற்றச்சாட்டுக்கள் இருப்பது பிரிட்டிஷ் அரசுக்கு நன்றாகத் தெரியும் நாம் அதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

புலிகள் லண்டனில் நிதி சேகரிப்புத் தொடர்பாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. இது தொடர்பாக பிரிட்டிஷ் சட்டம் ஏதாவது மீறப்பட்டுள்ளதா என்பதை பிரிட்டன் ஆராய்ந்துவருகிறது.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலுக்கு வர இருப்பதோடு விடுதலைப் புலிகள் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டப்படும் நடவடிக்கைகளை பிரிட்டிஷ் அரசு தொடர்ந்து மீளாய்வு செய்துவரும்.

இப்படி வெளியுறவு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-3-7)

## நால்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

39 - புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு) மானிப்பாயிலும், இராசையா சிவகுமாரன் (வயது 33 - நீராவியடி, யாழ்ப்பாணம்) அவரது வீட்டிலும், சுப்பையா தூயஞானச் செல்வம் (வயது 44 - கேணிக்குளத்தடி, இருபாலை) சங்கானையிலும் கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொடிகாமம் வடக்கு பகுதியில் வைத்து அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி சிவராசா (வயது 22) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5-6-10)

## செட்டிகுளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கென அழைத்துச் செல்லப்பட்டவர்களில் 4 பேர் பொதுமக்கள் எனவும் - ஏனையோர் தமது அமைப்பின் தொண்டர்கள் எனவும் - அந்த அமைப்பு அறிவித்துள்ளது. (இ-7)

## ஆனைக்கோட்டை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாம்பிள்ளை அன்ரன் நிக்ஷன் என்பவரே மரணமானவர் ஆவார்.

கொழும்புத்துறை மகாவித்தியாலய மாணவனான இவர் கொழும்புத்துறையில் இருந்து இடம்பெயர்ந்து முள்ளி நலன்புரி நிலையத்தில் வசித்து வந்தார். சம்பவ நேரம் அங்குள்ள மீன்சந்தையில் இவர் 'சொப்பிங் பாக்' விற்றுக் கொண்டிருந்தார்.

இந்தச் சம்பவத்தில் பழக்கடை வியாபாரியான கந்தையா துரைசிங்கம் (வயது 57 - ஆனைக்கோட்டை). பாலசிங்கம் இராமசாமி (வயது - 47 ஆனைக்கோட்டை), குருநகரில் இருந்து இடம்பெயர்ந்து பழைய பொலீஸ் நிலைய வீதி ஆனைக்கோட்டையில் வசிக்கும் திருமதி ஞானசீலன் இராஜேஸ்வரி (வயது 40) ஆகியோர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த இராணுவச்சிப்பாய் பலாலியிலுள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவனின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னா நேற்றுமாலை 6 மணிக்கு பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஐ.குணதிலக்க மேற்கொண்டு வருகிறார். (இ-3-5-6-15-51-135-139)

## கைதிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது உறவினர்கள் இங்கு மேல் நீதிமன்றம் இல்லாத காரணத்தால் வவுனியாவுக்கு மாற்றப்பட உள்ளதாகவும் எனவே மேல்நீதிமன்றத்தினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து அவர்களின் வழக்குகளை இங்கேயே நடத்த நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஊர்வலமாக யாழ்.செயலகம் சென்ற இவர்கள் யாழ்.அரச அதிபரைச் சந்தித்து ஜனாதிபதிக்கு முகவரியிட்ட மகஜர் ஒன்றினைக் கையளித்தனர்.

யாழ்.செயலகத்திலிருந்து மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அலுவலகங்களுக்கும் ஊர்வலமாகச் சென்று இந்த மகஜரின் பிரதிகளைக் கையளித்தனர். (இ-5-86)

## யாழ்.கஸ்தூரியார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறையைச் சேர்ந்த ஏ.முரளிதரனின் சடலம் அவரது உறவினர்களிடமும் ஒப்படைக்கப்பட்டன.

நேற்றுக் காலை மேற்படி சம்பவம் இடம்பெற்ற இடத்தினை நேரில் சென்று யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பார்வையிட்டார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலங்களை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் நாளை 23ஆம் திகதி இச்சம்பவம் தொடர்பான சாட்சியங்களை பதிவு செய்ய நீதிமன்றுக்கு சமுகம் அளிக்குமாறு உறவினர்களுக்கு உத்தரவிட்டார். (இ-5-6-15-139)

## மகேஸ்வரனின்...

(நாலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவின் கூட்டுக்கொள்கை எம்மிடையே ஆழமாக வேரூன்றிய தன் காரணமாக ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கமும் தமக்குத்தாமே விதித்துக் கொண்ட கட்டுப்பாடுதான் எம்மை ஒற்றுமையாகவும் ஒருமனதாகவும் இணைத்து அதன்படி செயற்பட வைத்து வருகிறது என்பதையும், இது சங்கங்களின் சுய கட்டுப்பாடே தவிர சமாசம் விதித்த கட்டுப்பாடு அல்லவென்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன் - என்றுள்ளது.


# தொடர்பு கொள்ளவும்



**திருமதி கந்தப்பிள்ளை கனகம்மா**

என்பவரை அறிந்தவர்கள் அல்லது அவர் இருக்கும் இடம் தெரிந்தவர்கள் *பொன்னையா தெட்சணாமூர்த்தி (சிவன் வீதி, ஆவரங்கால் - மருமகன்)* உடன் தொடர்புகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

பொ.தெட்சணாமூர்த்தி
(மருமகன்)

*சிவன் வீதி,*
*ஆவரங்கால்.*

(80758)

இன்றைய
வீடியோ CD வெளியீடு
புரட்சிக்காரன்
மூர்த்தி வீடியோ
மானிப்பாய் (C/13938)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
சத்தியராஜின
புரட்சிக்காரன்
ஒறிஜினல்
வீடியோ CD வெளியீடு
சூர்யா - ஜோதிகாவின்
உயிரிலே கலந்தது
(Five Star)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/13937)

பிரத்தியேக வகுப்புக்கள்
கட்டுடை - மானிப்பாய்
*இரசாயனவியல் :- திரு.மணியம்*
புதன் 3.00 - 4.00 2001 A/L(மீட்டல்)
வியாழன் 4.00 - 5.00 2002 A/L
*இணைந்த கணிதம் :-*
திரு.U.குணம்
புதன் 4.00 - 5.30 2001 A/L(மீட்டல்)
வியாழன் 3.00 - 4.00 2002 A/L
(80732)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
இணைந்த கணிதம்
A/L 2002 எறியம்
ஆரம்பம் : 25.11.2000
(சனி, ஞாயிறு 8.00 a.m)
A. பத்மநாதன்
(80745)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.